[2005 செப்டம்பர் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

13—

கூட்டுறவுச் சங்கம்

***74538—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் வட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக தாலுகாவின் தலைமையிடமான பென்னாகரத்திலேயே தலைமைக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருவதால் புதியதாக ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) எழாது.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு பிரிக்கப்படாத நிலையில் இருந்த தருமபுரி மாவட்டந்தான் தமிழகத்திலே மிகமிக பின்தங்கிய மாவட்டம். தற்போது கிருஷ்ணகிரியை பிரித்த பிறகு அதிலும் வளர்ச்சி பெறாத ஒரு மாவட்டமாக தருமபுரி மாவட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, என்னுடைய பென்னாகரம் தொகுதி விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற விவசாயக் கூலிகளே நிறைந்த பகுதி. வேறு எவ்வித தொழில் வசதியும் இல்லாத ஒரு பரந்துபட்ட பகுதி. குறிப்பாக அங்குள்ள மக்கள் இன்று தொடர்ந்து மழை குறைந்து வருகின்ற காரணத்தினாலே கர்நாடகாவில் குறிப்பாக பெங்களூர் மாநகரத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் தினமும் கூலிவேலைக்குச் சென்று வரக்கூடிய அவல நிலை இருக்கின்ற

2005 செப்டம்பர் 22]

காரணத்தாலேதான் ஒரு ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போதாது என்ற நிலையிலும், அதுவும் குறிப்பாக முழுமையாக செயல்படாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால் இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளின் மக்கள் வாழ்க்கைத் தரம் முன்னேறுவதற்கு இன்னும் நிறைய கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி ஆடு வளர்ப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 71 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில் பென்னாகரம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் உட்பட 9 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் நிலவிய வறட்சியின் காரணமாக ஆடு வளர்ப்பிற்கான மேய்ச்சல் நிலங்கள் போதுமானதாக இல்லாததாலும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வங்கிகளில் ஏற்கெனவே வழங்கப்பட்ட கடனை உறுப்பினர்கள் முறையாக திருப்பிச் செலுத்தாத காரணத்தால் வங்கிகள் நிதியுதவி செய்ய முன்வராத காரணத்தாலும், உறுப்பினர்களுடைய ஆடு வளர்ப்புச் சங்க ஈடுபாட்டில் போதிய ஆர்வம் இல்லாததாலும் சங்கங்களைச் செயல்பட வைக்க வாய்ப்பில்லாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆடு வளர்க்கப் போதிய வசதிகள் இல்லை, மேய்ச்சல் தரை இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால், பென்னாகரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே குன்றுகளும், சிறுமலைகளும் மேய்ச்சல் நிலங்களும் கொண்ட பரந்துபட்ட பகுதி. வாய்ப்பு இருக்கிறது. வேறு தொழிலுக்கு வாய்ப்பில்லாத காரணத்தினாலேதான் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்த ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி அவர்கள் வாழ்க்கையிலே உயர்வதற்கு, வாழ்வதற்கு மீண்டும் அரசு இந்த வாய்ப்பினை உருவாக்கித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிச்சயமாக இந்த நிதி ஆண்டில் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.